**F.No:FC-11/61/2021-FC**

இந்திய அரசு

**சுற்றுச்சூழல், வனம் (ம) காலநிலை மாற்ற அமைச்சகம்**

(வனப்பாதுகாப்பு பிரிவு)

இந்திரா பரியாவரன் பவன்,
அலிகன்ஜ், ஜோர்பாக்சாலை
புது தில்லி – 110 003.
நாள். 20 அக்டோபர் 2021.

# சுற்றறிக்கை

பொருள் வனச் (பாதுகாப்பு) சட்டம், 1980ல் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள் மீதான கருத்துக்கள்/ ஆலோசனைகள் வரவேற்கப்படுதல் – குறித்து.

அம்மையீர்/ ஐயா,

வனச் (பாதுகாப்பு) சட்டம், 1980ல் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள் தொடர்பாக அனைத்துத் தரப்பினரிடமிருந்து கருத்துக்கள் / ஆலோசனைகள் பெறுவதற்காக. ஆலோசனை/ கலந்தாய்வுக் குறிப்பானது (Consultation Paper), மத்திய அமைச்சகத்தின் இணையதளமான https://moef.gov.in மற்றும் PARIVESH portal (https://parivesh.nic.in)ல் இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆலோசனை/ கலந்தாய்வுக் குறிப்பு பல்வேறு மாநில/ வட்டார மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு மேற்கூறிய இரு இணையதளங்களிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**2.** பொதுத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள ஆலோசனை/ கலந்தாய்வுக் குறிப்பின் ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளின் பொருள் விளங்கங்களில் வேறுபாடு ஏதேனும் இருப்பின், ஆங்கில வடிவிலான பொருள் விளக்கமே இறுதியானதாகக் கருதப்படும் என இதுகுறித்து விளக்கம் அளிக்கப்படுகிறது.

3. ஆலோசனை/ கலந்தாய்வுக் குறிப்பின் மீதான கருத்துக்கள்/ ஆலோசனைகளை fca-amendment@gov.in என்ற மின்னஞ்சல் வாயிலாக தெரியப்படுத்தவும்.

4. கருத்துக்கள்/ ஆலோசனைகளை அமைச்சகத்திற்கு அனுப்ப வேண்டிய இறுதி நாள். 01.11.2021.

ராகேஷ்குமார்
தொழில்நுட்ப அலுவலர் (வ)

**பெறுநர்**

கூடுதல் தலைமை செயலாளர் (வனம்)/ முதன்மை செயலாளர் (வனம்),
அனைத்து மாநிலங்கள்/ ஒன்றிய ஆட்சிப்பகுதிகள்.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், அனைத்து மாநிலங்கள்/ ஒன்றிய ஆட்சிப்பகுதிகள்.
வட்டார அலுவலர்கள், அனைத்து ஒருங்கிணைந்த வட்டார அலுவலகங்கள்,
சுற்றுச்சூழல், வனம் (ம) காலநிலை மாற்ற அமைச்சகம்,
அனைத்து தொடர்புடையவர்கள்.

நகல்

இயக்குநர் (தொழில்நுட்பம்), தேசிய தகவல் மையம், (அமைச்சகம் மற்றும் PARIVESH இணைய தளத்தில்பதிவேற்றம் செய்யவதற்காக)

# 1980 ஆம் ஆண்டு வனச் (பாதுகாப்பு) சட்டத்தில் மேற்கொள்ள கருதப்பட்ட திருத்தங்கள் மீதான ஆலோசனை/கலந்தாய்வு குறிப்பு

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம்

இந்திய அரசு

இந்திரா பரியாவரன் பவன்

ஜோர்பாக் சாலை, புது தில்லி

அக்டோபர், 2021

## A. பின்னணி

1. வனச் (பாதுகாப்பு) சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு, 1980ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ஆம் நாள் நடைமுறைப்படுத்தப்பட்டது. (இனி இச்சட்டம் என்று குறிப்பிடப்படும்). இச்சட்டம், வனங்களின் பாதுகாப்பிற்கான மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதனைச் சார்ந்த அல்லது அதுகுறித்த பொருண்மைக்கு வகைசெய்கிறது என இச்சட்டத்தின் முகவுரை விவரிக்கிறது. நாடாளுமன்றத்தில் இந்த சட்டமுன்வடிவை (மசோதாவை) அளித்த போது (சட்டமுன்வடிவ எண். 201/1980) இந்த சட்டமுன்வடிவுக்கு அளிக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் காரணங்கள் குறித்த விவர அறிக்கை பின்வருமாறு:

**நோக்கங்கள் மற்றும் காரணங்கள் குறித்த விவர அறிக்கை**

1) வனங்கள் அழிப்பு சுற்றுச்சூழல் ஏற்றத்தாழ்வு தன்மையை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் சீரழிவுக்கு வழிவகுக்கிறது. நாட்டில் பெரிய அளவில் காடுகள் அழிக்கப்பட்டு வருவது மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

2) மேலும் வனங்கள் அழிக்கப்படுவதை ஆய்வு செய்யும் நோக்கில், குடியரசுத் தலைவர் அவர்கள், 25.10.1980 அன்று, 1980ஆம் ஆண்டு வனப் (பாதுகாப்பு) அவசர சட்டத்தை

பிறப்பித்தார். காப்பு வனங்களில் மரங்களை வெட்டுவதற்கும் வனமல்லாத நோக்கங்களுக்காக வன நிலத்தை பயன்படுத்துவதற்கும் மத்திய அரசின் முன் அனுமதி அவசியமென மேற்சொன்ன அவசரச் சட்டம் கூறுகிறது. அத்தகைய ஒப்புதலை வழங்குவது தொடர்பாக மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்க ஒரு ஆலோசனைக் குழுவை அமைப்பதற்கும் இந்த அவசரச் சட்டம் வழிவகை செய்தது.

3) மேற்கண்ட அவசர சட்டத்தை மாற்றீடு செய்வதற்கு இந்த சட்டமுடிவு கோருகிறது.

**2.** 1988ஆம் ஆண்டில் இச்சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. 1988ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட பின்னர், நாளது வரையிலான சட்டத்தின் வடிவம் இணைக்கப்பட்டுள்ளது.

**3.** 12.12.1996 ஆம் நாள் வரையில், மாநில அரசுகள், மத்திய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் வரும் பகுதிகள் மற்றும் மத்திய அரசு, 1927ஆம் ஆண்டு இந்திய வனச் சட்டம் அல்லது ஏனைய யாதொரு உள்ளூர் சட்டத்தின் கீழ் அறிவிக்கையிடப்பட்ட வனங்கள் மற்றும் வனத்துறையின் நிருவாக கட்டுப்பாட்டில் கீழ் இருந்த வனங்களுக்கு மட்டுமே இச்சட்டத்தின் விதிமுறைகளைப் பயன்படுத்துவது பொதுவான நடைமுறையாகும்.

மாண்பமை உச்சநீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு (சிவில்) எண் 202/1995 இல் டி.என். கோடவர்மன் திருமுல்பாட் எதிர் இந்திய அரசு மற்றும் ஏனையோர் குறித்த வழக்கில் அளித்த 12.12.1996 நாளிட்ட தீர்ப்பில், சட்டம் பொருந்தக்கூடிய தன்மை குறித்தும், மற்றும் சட்டத்தின் விதிமுறைகள் பின்வருவனவற்றிற்கு பொருந்தும் என்றும் தெளிவுபடுத்தியது :

a. உரிமை, அங்கீகாரம், வகைப்பாடு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் யாதொரு அரசின் பதிவில் 'வனம்' என்று பதிவுசெய்யப்பட்ட அனைத்து பகுதிகளும் யாதொரு சட்டத்தின் கீழ் வனம் என அறிவிக்கையிடப்பட்ட பகுதிகளும் இதில் அடங்கும்;

b. மேற்சொன்ன துணை-பத்தி (a)-இன் கீழ் உள்ள அனைத்துப் பகுதிகள் நீங்கலான மற்றும் 'காடு' என்பதற்கு அகராதியில் விளக்கம் அளிக்கப்பட்டதற்கு ஒத்திசைவான அனைத்து பகுதிகள்.

c. மாண்பமை உச்சநீதிமன்றத்தின் 12.12.1996 ஆம் நாளிட்ட உத்தரவின் அடிப்படையில் அமைக்கப்பட்ட வல்லுனர் குழுவால் 'வனம்' என அடையாளம் கண்டறியப்பட்ட அனைத்துப் பகுதிகள், அதன்படி 1997

ஆம் ஆண்டில் மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டன.

ஒவ்வொரு மாநிலத்திலும் வல்லுநர் குழுவால் வனம் என கண்டறியப்பட்ட ஏனைய யாதொரு பகுதியிலும் வனம் என்பதன் அகராதியின்படி பொருள் விளக்கத்தின் கீழ் வருகின்ற நிலங்களிலும் சட்டத்தின் விதிமுறைகளை மாநில அரசுகள் பயன்படுத்தத் தொடங்கின. வனம் சாரா நிலங்களில் உள்ள மலைத்தோட்டப் பயிர்களுக்கு இந்த சட்டம் பொருந்தும் என்று கருதும் வகையில் மேற்கண்ட நீதிமன்ற உத்தரவு பொருள் கொள்ளப்பட்டது.

4. சட்டத்தின் விதிமுறையின்படி, மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகள் ஏதேனும் ஒரு வன நிலத்தை வேறு நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு மரங்களை வெட்டுவது அல்லது அல்லது குத்தகைக்கு விடுவதற்கு ஆணைகளை பிறப்பிக்கும் முன்னர், மத்திய அரசின் முன் அனுமதி பெறுவது கட்டாயமாகும்.

## B. ஆலோசிக்கப்பட வேண்டிய பொருண்மைகள்

1. தற்போதைய சூழலில், அனைத்து அரசு வன நிலங்களும் (அறிவிக்கையிடப்பட்டதும் அறிவிக்கையிடப்படாததும்) யாதொரு அரசு

பதிவிலும் வனமாக பதிவு செய்யப்பட்ட பகுதியும், இந்த சட்ட வரம்பின் கீழ் வருகிறது. மேலும், சில உள்ளூர் வரையறுக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் தாவரங்களின் தொகுதியை கொண்ட நிலங்கள் வனமாக கருதப்படுமாயின் உடைமை மற்றும் வகைப்பாடு எவ்வாறாயிருப்பினும் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் வருகின்றன. அத்தகைய நிலத்தை அடையாளம் காண்பது ஓரளவிற்கு தன்னுணர்வு சார்ந்ததும், தன்னிச்சையானதுமாகும். இது தெளிவின்மைக்கு வழிவகுக்கிறது. இதன் விளைவாக, குறிப்பாக தனிநபர்களிடமிருந்தும் அமைப்புகளிடமிருந்து ஏராளமான மனக்கசப்புகளும் எதிர்ப்புகளும் ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. தனியார் பகுதியை வனமாக கருதுவது, ஒரு தனிநபர் அவரது சொந்த நிலத்தை யாதொரு வனம் சாராத நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தும் அவரது தனிப்பட்ட உரிமையை கட்டுப்படுத்துவதாக உள்ளது. பல நேரங்களில், நிலப்பயன்பாட்டிற்கான மாற்றம் கோரிய நேர்வுகள் சட்ட விதிமுறைகளின் கீழ் பரிசீலிக்கப்படுவதில்லை. அதற்கு அனுமதிக்கப்பட்டாலும் கூட, உரிமையாளர், அவரது சொந்த நிலத்தை வனம் சாராத நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு, ஈட்டு நிலமும் ஏனைய இழப்பீட்டு வரிகளும் செலுத்தப்பட வேண்டியுள்ளது. இது பெரும்பாலான தனியார் நிலங்களை மரங்கள் இல்லாமல் வைத்திருக்கும் போக்கை வளர்க்க

வழிவகுத்தது. நிலத்தில் மரம் வளப்பதற்கான வாய்ப்பு இருந்தபோதிலும் கூட தனியார் நிலங்களில் அவ்வாறு மரம் வளர்க்காத நிலையே மேன்மேலும் அதிகரித்துள்ளது. இதன் அடிப்படையில், குறிக்கோள் சார்ந்த முறையில், இச்சட்ட பயன்பாட்டின் முக்கியத்துவத்தை வரையறை செய்வது மிகவும் அவசியமென கருதப்படுகிறது.

2. இரயில்வே, நெடுஞ்சாலைகள் முதலியவற்றின் வழித்தட உரிமை மீது இச்சட்டம் பொருந்தக்கூடிய வாய்ப்பினை கண்டறிவது குறித்து இரயில்வே அமைச்சகம், சாலை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் மிகுந்த அதிருப்தியில் உள்ளன, பெரும்பாலான நேர்வுகளில், இரயில்வே இருப்பு பாதைகள் மற்றும் சாலைகளை கட்டுவதற்கான / அமைப்பதற்கான குறிப்பிட்ட நோக்கத்துடன், 1980ஆம் ஆண்டுக்கு முன்னரே, இத்தகைய மேம்பாட்டு நிறுவனங்களால் இந்த வழித்தட உரிமைகள் முறையாக பெறப்பட்டுவிட்டன என கூறப்படுகிறது. 1980 ஆம் ஆண்டிற்கு முன்னர், அவ்வாறு பெறப்பட்ட நிலத்தில், பாதி நிலம், இந்நிலம் பெறப்பட்டதற்கான நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டது. மீதமுள்ள நிலம், எதிர்கால கட்டுமானங்கள் / விரிவாக்கங்களுக்காக அப்படியே விடப்பட்டன. அவ்வாறு விடப்பட்ட நிலத்திலுள்ள மரங்களும் வனங்களும் அந்த நிலையிலே

விடப்பட்டன (1980ஆம் ஆண்டுக்கு முன்னர்). மேலும், காலியான அப்பகுதிகளில், அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் மரங்கள் நடப்பட்டன. கையகப்படுத்தப்பட்ட நிலத்திலுள்ள அத்தகைய மரங்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், சில இனங்களில், இவை பாதுகாக்கப்பட்ட வனங்கள் என அறிவிக்கையிடப்பட்டன. சட்டம் இயற்றப்பட்டு அதன் பொருந்துத்தன்மை குறித்த மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் மேற்கொண்ட விளக்கத்தின் அடிப்படையில் அத்தகைய அனைத்து நிலத்திற்கும், வனம் சாரா பயன்பாட்டிற்காக ஒன்றிய அரசின் முன் அனுமதி அவசியமானதாகும். எனவே, நிலத்தை வைத்திருக்கும் இந்த அமைப்புகள் (இரயில்வே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், பொதுப் பணித் துறை, முதலியவை) மேற்சொன்ன சட்டத்தின் கீழ் ஒப்புதல் பெற வேண்டியது அவசியமானதாகும், மேலும், உண்மையில், வனம் சாரா நோக்கங்களுக்காகப் பெறப்பட்ட அத்தகைய நிலத்தை பயன்படுத்துவதற்காக தற்போதைய நிகர மதிப்பு (Net Present Value), ஈடுசெய் காடுவளர்ப்பு போன்ற வரையறுக்கப்பட்ட இழப்பீட்டு வரிகளையும் செலுத்த வேண்டுவது அவசியமாகும். 25.10.1980ஆம் நாளுக்கு முன்னர் பெறப்பட்ட அத்தகைய நிலங்களை இச்சட்டத்தின் வரம்பெல்லையிலிருந்து விலக்குவதற்கு அமைச்சகம் தற்போது கருதி வருகிறது.

3. (i) இந்தியா, பெருமளவில், வெப்ப மண்டல நாடாக இருப்பதால், இயல்பாகவே, அதிக அளவிலான தாவரங்கள், விரைவாக பெருமளவில் வளர்ந்துவிடக்கூடிய தன்மை பெற்றுள்ளது. அவை, அப்படியே விட்டுவிடப்பட்டால், குறிப்பிட்ட காலத்தில், தானாகவே, காடு போல் வளர்ந்துவிடும். இதனால், கவனிக்கப்படாத அத்தகைய நிலங்கள், அகராதியின்படி வனம் என்ற பொருள் விளக்கத்தின்படி, கருதப்பட்ட வனம் என்ற வகைப்பாட்டின்கீழ் கொண்டுவரப்படுகிறது. எனவே, அத்தகைய நிலங்களுக்கும், இச்சட்டத்தின் விதிமுறைகள் பொருந்துகின்றன. எனவே, பொதுவாகவே, மக்கள் தங்கள் சொந்த நிலத்தில், மரம் போல் வளரும் யாதொரு தாவரத்தையும் தடுக்கும் மனப்பாங்கினைக் கொண்டுள்ளனர்.

(ii) நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை காடு மற்றும் மரங்களால் சூழப்பட்ட பகுதியாக மாற்ற வேண்டும் என்ற 1988ஆம் ஆண்டு தேசிய வனக் கொள்கை வலியுறுத்துகிறது. இந்த இலக்கை அடைவதற்கு நடப்பட வேண்டிய மரங்களின் எண்ணிக்கையும், அதன் வேகமும் மன நிறைவளிக்கக்கூடிய வகையில் இல்லை. நாட்டின் நிலப்பகுதியியில் 24.56 விழுக்காடு தற்போது நாட்டின் வனம் மற்றும் மரங்கள் சூழப்பட்ட பகுதியாக உள்ளது. வனப் பகுதியை அதிகரிப்பதில் பல்வேறு நடைமுறை இடர்பாடுகள் உள்ளன.

எனவே, தனியார் உடைமையின் கீழுள்ள நிலம் உட்பட அதிகளவிலான வனம் சாரா பகுதிகளிலும் சூழலியல், பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நலன்களுக்காக மரம் நடப்பட வேண்டும்.

(iii) மேலும், கரியமில வாயு உமிழ்வை குறைப்பதற்காக நாட்டிற்கான தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பைக் (Nationally Determined Contribution) கருத்தில் கொண்டு, 2030 ஆம் ஆண்டிற்குள் கூடுதலாக 2.5 முதல் 3.0 பில்லியன் டன் அளவு கரியமிலவாயுவுக்கு இணையான கரிம சேமிப்பை அடையவேண்டும். மேலும் ஏறத்தாழ ரூ. 45 ஆயிரம் கோடி அளவிற்கு மரம் மற்றும் மரத்திலிருந்து தயாரிக்கப்படும் பொருட்களின் இறக்குமதிகான அந்நியச் செலாவணியை குறைப்பதற்கு, அரசு வனங்களுக்கு வெளியே கிடைக்கப்பெறும் அனைத்து நிலங்களில் பெருமளவு மர நடுதலுக்கும் மற்றும் காடு வளர்ப்புக்கும் ஊக்குவிக்க வேண்டியதும் அவசியமாகும். ஆனால் இதனை உறுதி செய்வதற்கு, தனியார் நிலங்களில் / வனம் சாராத நிலங்களில் வளர்க்கப்படும் தாவரங்களுக்கு அல்லது மரம் வளர்ப்பிற்கு சட்ட விதிமுறைகள் பொருந்தாது என்ற நிலையை உருவாக்கி, இது தொடர்பான அச்சத்தை மரம் வளர்போரிடையே போக்குவது அவசியமாகும்.

4. இந்தியாவில், காடுகள் தொடர்பாக வெவ்வேறு நிலப் பதிவேடுகள் பராமரிக்கப்படுகின்றன. பல நேரங்களில் ஒரே நிலத்திற்கு வருவாய்த் துறையிலும், வனப் பதிவுகளிலும், மாறுபட்ட பதிவுகள் இருக்கின்றன. இது தவறான விளக்கங்களுக்கும் மற்றும் வழக்குகளுக்கும் வழிவகை செய்கிறது. எனவே, அவர்களுக்கு இத்தகைய வரையறைகள் மற்றும் சட்டத்தின் பொருந்தக்கூடிய தன்மை குறித்தும் தெளிவு தேவைப்படுகிறது. வருவாய் பதிவேடுகள், நில உடமையாளர் நிலத்தின் தன்மை (வனம் உள்ளிட்டவை) சட்டப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். காடுவளர்ப்பு நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு, (வேளாண் காடு வளர்ப்பு மற்றும் ஏனைய மரம் வளர்ப்பு அமைப்புகள் உட்பட) 12.12.1996 ஆம் ஆண்டிற்கு பிறகு, மேற்சொன்ன சட்டத்தின் அதிகார வரம்பெல்லைக்கு வெளியே இருக்கும்வண்ணம் பண்ணைக்காடுகள், இதர காடு வளர்ப்புத் தோட்டங்கள் முதலியன வருவாய் ஆவணங்களில் பதிவு செய்யப்படுகிறது என்று உறுதியாக நம்பப்படுகிறது.

5. பல இடங்களில், சாலைகள் மற்றும் இருப்புப் பாதைகளின் ஓர நிலப்பகுதிகளில் சாலையோர மரங்கள் வளர்க்கப்பட்டு அவை காடுகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. பல பகுதிகளில், அத்தகைய நிலங்கள் முழுவதும்

சாலை / இரயில் பாதையை அடுத்துள்ள பகுதிகள் பயனுள்ள இடங்களாகவும் / வாழ்விடங்களாகவும் மேம்படுத்தப்பட்டுள்ளன. இந்த வாழ்விடங்கள் மற்றும் பயன்பாட்டு பகுதிகளுக்கு (அரசு மற்றும் தனியார் இடங்கள்) சாலைகளிலிருந்து அணுகுவதற்கு இந்த சாலையோர மரத்தோட்டங்களை பயன்படுத்த வேண்டியுள்ளது. இத்தோட்டங்கள் வனமாக கருதப்படுவதால், அணுகுசாலை / அணுகுப் பாதை என்பது வனமல்லாத பணியாக கருதப்படுகிறது. இந்த காடுவளர்ப்பு அல்லாத நடவடிக்கைக்காக வனத்துறையின் நிலத்தை பயன்படுத்துவதால், இதற்கு மத்திய அரசின் முன் அனுமதி தேவைப்படுகிறது. ஒவ்வொரு நேர்விலும் வனத்துறை நிலத்தின் தேவை சுமார் 0.05 எக்டேர் ஆகும். குடியிருப்பாளர்கள் / வணிக உரிமையாளர்களின் சிரமத்தைப் போக்குவதற்கு அத்தகைய ஒவ்வொரு அணுகுபாதைக்கும் 0.05 எக்டேர் வரை விலக்களிக்கப்படலாம் என்று அமைச்சகம் கருதுகிறது.

6. சட்டத்திலுள்ள விதிமுறைகள் முறைப்படுத்தும் வகையில் மட்டுமே உள்ளன. இவை வனமல்லாத பணிகளைத் தடுக்கும் நோக்கில் உள்ளவையல்ல. புவியமைப்பில் தனித்தன்மை வாய்ந்த அல்லது அதிகளவு பாதுகாப்புத்தேவை மிகுந்த இடங்களில் வனமல்லாத பணிகளைத் தடுக்கும்

நோக்கில் இச்சட்டத்தின் விதிமுறைகள் ஏதும் இல்லை. மேலும், இச்சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து, 40 ஆண்டுகளுக்கும் மேலான இடைப்பட்ட காலத்தில், சூழலியல் மற்றும் சுற்றுச்சூழல் நடைமுறைகளில் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. உலகளவில் மாறிவரும், சூழல், சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலைகளுக்கு ஏற்ப, இயற்கை வளப்பாதுகாப்பு, வனப்பாதுகாப்பு, இயற்கை வளங்களை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கான கொள்கைகள், திட்டங்கள் போன்றவற்றில் பெருமளவு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இத்தகைய பெருமாற்றங்களை பயன்படுத்திக்கொள்ளும் வகையில், வளமான சூழலியல் மதிப்பீடுகளை வெளிக்கொணரும் சில பழமையான காடுகளை ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் பழமை மாறாமல் அதே நிலையில் பராமரிப்பதற்கான வழிவகையை சட்டத்தில் அறிமுகப்படுத்த அமைச்சகம் பரிசீலித்து வருகிறது.

7. பன்னாட்டு எல்லைப் பகுதிகளில் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதும், நமது எல்லைகளை அவ்வாறே பராமரித்து வருவதும் நாட்டின் இறையாண்மையை நிலைநிறுத்துவதற்கான முக்கியமான செயல்பாடாகும். தற்போதைய சூழ்நிலையில், பல நேரங்களில் வன நிலத்தை, வனம் சாரா பிற பயன்பாட்டிற்காக பயன்படுத்த ஒப்புதல் பெறுவதற்கான நடைமுறையில்,

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த, உத்தி சார்ந்த மற்றும் பாதுகாப்பு திட்டங்களில் கால தாமதம் ஏற்படுகிறது. இதன் விளைவாக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் இத்தகைய உள்கட்டமைப்பு வளர்ச்சியில் பின்னடைவு ஏற்படுகிறது. மேற்சொன்ன சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் இத்தகைய திட்டங்கள் மத்திய அரசின் முன் அனுமதி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டுமா? அளிக்கப்பட்டுள்ள கால வரையறைக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய இத்தகைய உத்தி சார்ந்த மற்றும் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டி, வனப் பகுதியை வனம் சாரா பயன்பாட்டிற்காக பயன்படுத்த மாநிலங்களை அனுமதிக்கலாமா என்பது குறித்தும் அமைச்சகம் பரிசீலித்து வருகிறது.

8. மேலும் வனநிலங்களை சுரங்கப் பணிகளுக்காக குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யும் நேர்வுகளில், மேற்சொன்ன சட்டத்தின் உட்பிரிவு 2 (ii) மற்றும் 2(iii) -இன் பயன்பாடு பல்வேறு நேர்வுகளில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. சட்டத்தின் உட்பிரிவு 2(iii) குத்தகைக்கு அளிக்க வகை செய்யும் வேளையில், உட்பிரிவு 2(ii) வனப்பகுதியை, வனம் அல்லாத நோக்கத்திற்காக பயன்படுத்துவதைப் பற்றிக் குறிப்பிடுகிறது. உட்பிரிவு 2(iii) இன் கீழ் தற்போதுள்ள அனுமதிக்கான விதித்தமுறைகளின்படி, வன

நிலத்தின் தற்போதைய நிகர மதிப்பை (NPV) மட்டுமே செலுத்தத்தக்கதாக உள்ளது. மேலும், அத்தகைய அனுமதி வழங்குவது குறித்த பரிசீலனைகளில் தேவையான மிகுந்த கவனத்துடன் முடிவு எடுப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவே. மாறாக, உட்பிரிவு 2(ii) இன் கீழ் அனுமதி வழங்க முடிவெடுக்க வேண்டிய நேர்வுகளில், விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பல வழிகாட்டுதல்கள், சில நீதிமன்ற உத்தரவுகளின்கீழ் வரும் பரிந்துரைகள் மற்றும் பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றி, பெறப்படும் ஒவ்வொரு முன்மொழிவினை விரிவாக ஆய்வு செய்ய வேண்டும். காடுகளின் தற்போதைய நிகர மதிப்புடன் சேர்த்து (NPV) ஈடுசெய் காடு வளர்ப்பிற்கான தொகை (Compensatory Afforestation Fund), ஈடுசெய் காடு வளர்ப்பிற்கான நிலம் (Compenatory Afforestation Land), பாதுகாப்பு மண்டல மர வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக இழப்பீட்டு வரிகள் செலுத்தப்பட வேண்டும். இவ்வாறு, ஒரு சுரங்க குத்தகைதாரர் உட்பிரிவு 2(iii) இன் கீழ் அனுமதி பெற்று, தற்போதைய வெறும் நிகர மதிப்புத் தொகையை (NPV Money) செலுத்துவதன் பேரில் பெருமளவு வனப்பகுதியை வைத்திருக்கலாம். உட்பிரிவு 2(iii)ன்படி அனுமதி பெறப்பட்டு, ஆனால் குத்தகைதாரர் உட்பிரிவு 2(ii)ன்படி விண்ணப்பிக்கவில்லையெனில், உட்பிரிவு 2(iii) ன் கீழ் பெறப்பட்ட அனுமதியை வனநிலத்திற்காக பெறப்பட்ட

அனுமதியாக எடுத்துக் கொள்வதா, இல்லையா எனவும், மாண்பமை உச்சநீதிமன்றம் அளித்துள்ள உத்தரவின்படி, 1986ஆம் வருடத்திய சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்படி பெறப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட வேண்டுமா என்பது குறித்தும் தெளிவான நிலை இல்லை. முதலில், உட்பிரிவு 2 (iii) என்பது மரம் வளர்ப்பு / காடு வளர்ப்பு போன்ற நோக்கத்துடன் தொடர்புடைய குத்தகைக்கு (இங்கு நிலத்தை பிரிப்பது அல்லது வனம் சாரா பகுதியாக மாற்றுவது இதன் நோக்கமல்ல) மற்றும் சுரங்க குத்தகை போன்றவற்றிற்கு வனப்பகுதி நிலத்தை பிரிப்பது / வனம் சாரா பகுதியாக மாற்றும் நோக்கம் கொண்ட ஏனைய குத்தகை அல்லாதவற்றிற்கு விண்ணப்பிக்கப்பட வேண்டும் என்ற பொருள் இருந்தது. ஆனால் பின்னர், உட்பிரிவு 2 (iii) சுரங்கத்திற்கும் பிற வகையான குத்தகைகளுக்கும் விண்ணப்பிக்கப்பட வேண்டிய வகையில் உருவாக்கப்பட்டது. எனவே, சட்டத்தின் உட்பிரிவு 2(iii) ஐ நீக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டு, உட்பிரிவு 2(ii) வனம் சாரா நோக்கத்திற்காகப் பயன்படுத்தும் குறிக்கோள் கொண்ட எந்த விதமான குத்தகைகளுக்கும் பயன்படுத்தப்படலாம் என உத்தேசிக்கப்படுக்கிறது..

9. மிக ஆழமாக துளையிடுதல் (Extended Reach Drilling)) போன்ற புதிய தொழில்நுட்பங்கள் உருவாகி வருகின்றன. இதனால் வன நிலத்திற்கு அடியில் ஆழத்திலுள்ள எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை ஆராய்ந்து அவற்றை பிரித்தெடுக்க இயலும். ஆனால் வனப்பகுதிக்குரிய நிலத்தில், வனத்திற்கு ஆதாரமாக உள்ள மண் அல்லது நிலத்தடி நீர்ப்படுகைகளை பாதிக்காத வகையில், வனப்பகுதிகளுக்கு வெளியே இருந்து துளையிட்டு ஆராயலாம். இத்தகைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது சுற்றுச்சூழலுக்கு மிகவும் உகந்ததாக இருக்கும் என அமைச்சகம் கருதுகிறது, மேலும் இது சட்டத்தின் அதிகார வரம்பெல்லைக்கு உட்படாத வகையில் இருக்க வேண்டும்.

10. உச்சநீதிமன்றத்தின் 12.12.1996 ஆம் நாளிட்ட வரையறைகளின்படி, மாநிலத்தால் குறிப்பிட்ட தனியார் வனச் சட்டத்தின் கீழ் வரும் அல்லது அகராதியின்படி வனம் என்ற வரம்பெல்லைக்குள் வரும் நிலங்களைக் கொண்ட தனிநபர்களின் குறைகளை எளிதாக்குவதற்கும், அதன்படி தற்போது வனப் பாதுகாப்புச் சட்டம் நடைமுறையில் இருக்குமிடத்திலும், 250 சதுர மீட்டர் பரப்பளவுள்ள கட்டமைப்புகளை, வன பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் குடியிருப்பு அலகு உள்ளிட்ட உயர் / சீரிய நோக்கங்களுக்காக,

நிர்மாணிக்க ஒரு முறை மட்டும் தளர்வுகள் செய்து அத்தகைய உரிமையாளர்களை அனுமதிக்கலாம் என்று கருதப்படுகிறது.

11. சட்டத்தின் 2 ஆம் பிரிவில் உள்ள "வனப் பயன்பாட்டிற்கு அல்லாத" விளக்கத்தின் பகுதி, வனம் சாரா நடவடிக்கையாகக் கருதப்படும் மற்றும் அந்தப் பிரிவின் நோக்கத்திற்காக இல்லாத செயல்பாடுகளை அடையாளம் காட்டுகிறது. காடுகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்கு துணைபுரியும் நடவடிக்கைகள் வனம் அல்லாத செயல்களாக கருதப்படக்கூடாது என்று புரிந்து கொள்ளப்படுகிறது. அதன்படி, மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 2(ii) இன் நோக்கத்திற்காக உயிரியல் பூங்காக்கள், திறந்தவெளி வனஉயிரின காட்சிப் பூங்கா, வனப் பயிற்சி உள்கட்டமைப்புகள் போன்றவை "வனம் சாரா செயல்பாடு" என்ற பொருளுக்குள் அடங்காது என்று கருதலாம்.

12. வனம் சாரா நோக்கங்களுக்காக நிலத்தை பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட பின்னர் வன நிலங்கள் மற்றும் அதன் சூழலியலுக்கு உகந்ததாக இருப்பதற்கு இழப்பீட்டு வரிகளை விதிப்பது கட்டாயமாகும். அதே நோக்கத்திற்காக குத்தகையை புதுப்பித்தலின் போது எந்தவொரு வரியையும் இருமுறை விதிப்பது நியாயமற்றது என கருதப்படுகிறது.

13. சட்டத்தில் தெளிவான தண்டனை விதிமுறைகள் இருந்தபோதிலும், சட்ட விதிமுறையை மீறும் நிகழ்வுகளும் உள்ளன. சட்டத்தின் கீழ் குற்றங்களை தடுக்கும் வகையில், தண்டனையை மேலும் கடுமையாக்க வேண்டும் என்று அமைச்சகம் கருதுகிறது. இது தொடர்பாக, 2 ஆம் பிரிவின் கீழ் வரும் குற்றங்கள் ஓர் ஆண்டு காலத்திற்கு நீட்டிக்கப்படக்கூடிய சிறை தண்டனையுடன், தண்டனைக்குரியதாக ஆக்குவதற்கு தற்போது கருதப்படுகிறது. அக்குற்றங்கள் பிணையில் வெளிவரமுடியாத வகையிலும் நடவடிக்கை எடுக்கத்தக்க வகையிலும் இருக்கும். ஏற்கெனவே ஏற்பட்ட சேதங்களை சரிசெய்வதற்காக 3A ஆம் பிரிவின் கீழ் தண்டனை நடவடிக்கையுடன் கூடுதலாக தண்டனை இழப்பீடுக்கான விதிமுறைகளை அறிமுகப்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. மேலும், மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியின் கீழ் வரும் பகுதியிலுள்ள எந்தவொரு அதிகாரமைப்பும் சட்டத்தின் கீழ் குற்றத்தில் ஈடுபட்டிருக்கும் நேர்வில், தண்டனை இழப்பீடாக பெறப்படும் தொகையானது மாநில அழிக்கப்பட்ட வன நிலங்களுக்காக ஈடு செய்ய அளிக்கப்படும் நிதி மேலாண்மை மற்றும் திட்ட அதிகார அமைப்பில் (CAMPA) வைப்பீடு செய்யப்படுவதற்குப் பதிலாக தேசிய அழிக்கப்பட்ட வன நிலங்களுக்காக ஈடு செய்ய அளிக்கப்படும் நிதி

மேலாண்மை மற்றும் திட்ட அதிகார அமைப்பில் (CAMPA) வைப்பீடு செய்யப்படுவதற்கு கருதப்படுகிறது.

14. வன நிலத்தில் உண்மையான வனம் சாரா செயல்பாடுகளை பரிசீலிப்பதற்கு அல்லது கருதப்படுவதற்கு அளவை மற்றும் களஆய்வு நடவடிக்கைகள் (Survey and Investigation) என்பது முந்தைய நடைமுறைகள் ஆகும். இதுபோன்ற பல நடவடிக்கைகளில் வன நிலம் மிகக் குறுகிய காலத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. இதனால் வன நிலத்திற்கோ அல்லது அதில் உள்ள பல்லுயிர்ப் பெருக்கத்திற்கோ குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுவதில்லை. ஆனால், அது போன்ற நடவடிக்கைகள் வனம் சாரா நடவடிக்கையாகக் கருதப்பட்டு, முறையான நடைமுறையைப் பின்பற்றி மத்திய அரசின் முன் அனுமதி கோரப்படுவதால் இதற்கு உண்மையில் அதிக நேரம் பிடிக்கிறது. இதனைக் களைவதற்கு, குறிப்பாக இதன் தாக்கம் உணர முடியாத செயல்பாடுகளில், சட்டத்தின் விதிமுறைகள் பொருந்தா வண்ணம் திருத்தங்கள் மேற்கொள்ளலாம்.

****************

**பிற்சேர்க்கை (Annexure)**

## 1980 ஆம் ஆண்டு வனச் (பாதுகாப்பு) சட்டம்

### (1988 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுடன்)

இச்சட்டம், வனங்களின் பாதுகாப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதனைச் சார்ந்த அல்லது அது குறித்து தற்செயலாக நிகழக்கூடிய பொருண்மைகளுக்கு வகைசெய்கிறது.

இச்சட்டம், இந்தியக்குடியரசின் 31 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு இயற்றப்படுகிறது. அவை வருமாறு:-

**1. குறுந்தலைப்பு, விரிவாக்கம் மற்றும் தொடக்கம்-**

(1) இச்சட்டம், 1980 ஆம் ஆண்டு வனச் (பாதுகாப்பு) சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இச்சட்டம், ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் தவிர இந்தியா முழுவதும் நீட்டிக்கப்படுகிறது.

(3) இச்சட்டம் 25.10.1980 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்ததாக கருதப்பட வேண்டும்.

**2. வனங்களில் உள்ள மரங்களை வெட்டுவதற்கான கட்டுப்பாடுகள் அல்லது வனம் சாரா நோக்கங்களுக்காக வனப்பகுதி நிலங்களைப் பயன்படுத்துதல் தொடர்பான வரையறை**

மாநிலத்தில் அவ்வப்போது செயலில் உள்ள ஏனைய யாதொரு சட்டத்தில் என்ன சொல்லியிருப்பினும், மத்திய அரசின் முன் அனுமதி பெறாமல், யாதொரு மாநில

அரசு அல்லது ஏனைய அதிகார அமைப்பும், பின்வருவன குறித்த யாதொரு ஆணையும் பிறப்பிக்கக்கூடாது. அவையாவன;-

(i) யாதொரு காப்பு வனம் ( அந்த மாநிலத்தில் அவ்வப்போது செயலில் உள்ள யாதொரு சட்டத்தில் " காப்பு வனம் என்ற சொற்றொடரின் பொருள் விளக்கத்திற்குள்) அல்லது அதன் யாதொரு பகுதியும் காப்பு வனமாகக் கருதப்படாது.

(ii) வனம் சார்ந்த நிலம் அல்லது அதன் யாதொரு பகுதியையும் வனம் சாரா நோக்கத்திற்காகப் பயன்படுத்தலாம்;

(iii) வன சார்ந்த நிலம் அல்லது அதன் யாதொரு பகுதியும் குத்தகையின் மூலமாகவோ அல்லது வேறு யாதொரு முறையில் தனியாருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அமைப்புக்கு, கழகத்திற்கு, முகமைக்கு அல்லது அரசால் நிருவகிக்கப்படாத அல்லது கட்டுப்படுத்தப்படாத யாதொரு நிறுவனத்திற்கும் வழங்கப்படலாம்.

(iv) அந்த நிலத்திலோ அல்லது பகுதியிலோ இயற்கையாக வளர்ந்த மரங்களை, யாதொரு வனம் சார்ந்த நிலத்தையும் அல்லது அதன் எப்பகுதியையும் மறு காடு வளர்ப்பு நோக்கத்திற்காக அகற்றலாம்.

விளக்கம் - இப்பிரிவின் நோக்கத்திற்காக, "வனம் சாராத நோக்கம்" என்பது யாதொரு வனத்திற்குரிய நிலம் அல்லது அதன் பகுதியை பிரிப்பது அல்லது அகற்றுவது என்ப் பொருள்படும்.

a. தேயிலை, காபி, சுவையூட்டும் பொருட்கள், ரப்பர், பனை, எண்ணெய்வித்து தாவரங்கள், தோட்டக்கலை பயிர்கள் அல்லது மருத்துவ தாவரங்கள் போன்றவற்றை சாகுபடி செய்தல்;

b. மறு காடு வளர்ப்பு தவிர ஏனைய நோக்கத்திற்காக;

ஆனால் பாதுகாப்பு தொடர்பான அல்லது துணை நிலைக் கண்காணிப்பு, காடுகள் மற்றும் வனவிலங்குகளின் மேம்பாடு மற்றும் மேலாண்மை அதாவது, சோதனைச் சாவடிகள், தீயணைப்பு எச்சரிக்கைக் கோடுகள், கம்பியில்லா தகவல் தொடர்பு மற்றும் வேலிகள் அமைத்தல், பாலங்கள் மற்றும் மதகுகள், அணைகள், நீர்நிலைகள், அகழி நிலைகள், எல்லைகள், குழாய் தொடர்கள் அல்லது பிற நோக்கங்களுக்கானவை எவையும் சேர்க்கப்படவில்லை.

**3. ஆலோசனை குழுவை அமைத்தல்-**

மத்திய அரசு, பின்வரும் பொருண்மைகள் தொடர்பாக அந்த அரசுக்கு ஆலோசனை வழங்கத் தகுதி வாய்ந்ததாக கருதும் நபர்களைக் கொண்ட குழுவை அமைக்கலாம். அவையாவன;

1. பிரிவு 2 இன் கீழ் ஒப்புதல் வழங்குதல்; மற்றும்
2. மத்திய அரசால் குறிப்பிடப்படும் வனப் பாதுகாப்புடன் தொடர்புடைய வேறு எந்த பொருண்மையும்.

**3A. சட்டத்தின் விதித்துறைகளை மீறுவதற்கான அபராதம்**

யாரேனும் பிரிவு 2 இன் விதித்துறைகளில் ஏதேனும் ஒன்றை மீறியிருந்தாலோ அல்லது விதிமீறலுக்கு உடந்தையாக செயல்பட்டிருந்தாலோ அவர் பதினைந்து

நாட்கள் வரையிலான காலத்திற்கு நீட்டிக்கக்கூடிய சிறைத்தண்டனையுடன் தண்டிக்கப்படுவார்.

**3B. அரசு துறைகள் மற்றும் அதிகார அமைப்புகளின் குற்றங்கள்-**

1). (a) யாதொரு அரசு துறையால், துறைத் தலைவரால்;

(b) அதிகாரமைப்பால், குற்றம் நடந்த நேரத்தில் அதிகார அமைப்பிற்கும், அலுவல் நடப்பதற்கும் நேரடியாக பொறுப்பு வகிக்கும் மற்றும் பொறுப்புடைய யாதொரு நபரால், இந்தச் சட்டத்தின் கீழ் யாதொரு குற்றம் நேர்ந்திருப்பின் அவர் குற்றவாளி என கருதப்பட்டு அவருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தகுந்தவாறு தண்டனை அளிக்கப்படும்.

ஆனால், பகுதி (b)-இல் குறிப்பிடப்பட்டுள்ள துறைத் தலைவர் அல்லது யாதொரு நபர், அவர் அறியாமல் குற்றம் நடந்ததாக அல்லது அக்குற்றம் நடைபெறாமல் தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அவர் மேற்கொண்டதாக மெய்ப்பித்தாரயின், இந்த உட்பிரிவில் உள்ள எவையும் குறிப்பிட்ட அந்த நபரை யாதொரு தண்டனைக்கும் உட்படுத்தாது.

2) உட்பிரிவு (1)-இல் என்ன சொல்லி இருப்பினும், (1)ஆம் உட்பிரிவைச் சேர்ந்த (b) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு அதிகார அமைப்பு அல்லது அரசு துறையால் இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், துறைத் தலைவர் நீங்கலாக யாதொரு அலுவலரின் அல்லது அதிகார அமைப்பு குறித்த நேர்வில், (1) உட்பிரிவின் (b) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் நீங்கலாக, யாதொரு நபரின் ஒப்புதலுடன் அல்லது மறைமுக ஆதரவுடன் அல்லது யாதொரு புறக்கணிப்பின் காரணமாக குற்றம் செய்யப்பட்டுள்ளது என்று

மெய்ப்பிக்கப்படுகின்றபோது, அத்தகைய அலுவலர்கள் அல்லது நபர்கள் அக்குற்றத்திற்குக் காரணமானவர்களாகக் கருதப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கை தொடரப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.

## 4. விதிகளை இயற்றுவதற்கான அதிகாரம்

1) ஒன்றிய அரசு, அரசிதழில் அறிவிக்கையிடுவதன் வாயிலாக, இச்சட்டத்தின் விதித்துறைகளை மேற்கொள்வதற்கான விதிகளை இயற்றலாம்.

2) இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட ஒவ்வொரு விதியும், அவை இயற்றப்பட்ட பின்னர், கூடிய விரைவில், மொத்தம் முப்பது நாட்களுக்கு, ஒரு அமர்வில் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொடர் அமர்வுகளில், நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும். மேற்சொன்ன அமர்வுகளைத் தொடர்ந்து உடனடியாக அடுத்து வரும் அமர்வு நிறைவு பெறுவதற்கு முன்னர், மேற்சொன்ன விதியில் யாதொரு மாற்றம் செய்ய இரு அவைகளும் ஒப்புக்கொள்ளுமாயின், அல்லது அத்தகைய விதி இயற்றப்படக் கூடாதென இரு அவைகளும் ஏற்றுக்கொள்ளுமாயின், நேர்விற்கேற்ப, அதன்பின்னர், அவ்விதி, மாற்றம் செய்யப்பட்ட வடிவிலேயே செயலில் இருக்கும் அல்லது செயலில் இருக்காது; எனினும், அத்தகைய யாதொரு மாற்றம் அல்லது நீக்கல் அந்த விதியின் கீழ் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட எவற்றுக்கும் பாதிப்பின்றி இருக்க வேண்டும்

## 5. இரத்து செய்தலும் காப்புப் பகுதியும்

(1) 1980ஆம் ஆண்டு வன (பாதுகாப்பு) அவசர சட்டம் இதனால் மாற்றியமைக்கப்படுகிறது.

(2) அவ்வாறு இரத்து செய்யப்பட்டிருப்பினும், மேற்சொன்ன அவசர சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் செய்யப்பட்ட எவையும் அல்லது மேற்கொள்ளப்பட்ட யாதொரு நடவடிக்கையும் இச்சட்டத்தின் தொடர்புடைய விதித்துறைகளின் கீழ் செய்யப்பட்டவையாக அல்லது மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

******************